2026ம் ஆண்டு ஜுலை மாதம் 02ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1.ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி திருமதி.K.மோனிஷா, (Grade II Bench Clerk, Sub Court, Bhavani) ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

அ.வ.எண்.180/2016

வா.சா.1.**பழனிச்சாமி**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை -**

பிரதிவாதி ஆனந்தம்பாளையத்தில் வசித்துவருகிறார் என்றால் சரிதான். பிரதிவாதி குடியிருக்கும் இடத்திற்கும் நான் குடியிருக்கும் இடத்திற்கும் இடையில் 3கி.மீ தூரம் இருக்கும் என்றால் இருக்கும். பிரதிவாதியை எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் 15.07.2014ல் இடம் வாங்கும் போது தான் தெரியும். கிரைய ஒப்பந்த பத்திரம் எழுதுவதற்கு 10 நாட்களுக்கு முன்பே பேசி முடித்தோம். பிராதில் சொல்லியுள்ள முகவரியில் தான் பிரதிவாதி குடியிருந்து வருகிறாரா என்றால் ஆமாம். நான் கிரையம் ஒப்பந்தம் செய்ததாக சொல்லும் இடத்தில் தான் பிரதிவாதி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு 45 வயதிற்கும். பிரதிவாதி தாவா சொத்தில் எத்தனை வருடங்களாக குடியிருந்து வருகிறார் என்றால் அது தெரியாது. பிரதிவாதிக்கு குடியிருந்து வரும் வீடு தொகுப்பு தார்ஸ் வீடாகும். தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கும் சேர்த்து தான் ஒப்பந்தம் போட்டேனா என்றால் ஆமாம். தாவா சொத்து மேட்டுர் பவானி ரோட்டிற்கு கிழக்குபுறம் உள்ளது என்றால் சரிதான். மெயின்ரோட்டில் இருந்து 25அடி தூரத்தில் இருக்குமா என்றால் இருக்கும். தாவா சொத்து 3 ½ செண்ட் ஆகும். செண்ட் எவ்வளவு விலை பேசப்பட்டது என்றால் மொத்தமாக ரூ.3லட்சத்திற்கு விலைபேசினேன். கிரைய ஒப்பந்தம் எழுதியபோது வீடு தனியாகவும், இடம் தனியாகவும் விலை பேசினோமா என்றால் இல்லை. நான் கிரைய ஒப்பந்தம் போட்டதாக சொல்லும் அன்றே தாவா சொத்து 1செண்ட் ரூ.5 லட்சத்திற்கு விலை போகும் என்றால் இல்லை. கிரையம் ஒப்பந்தம் செய்தபோது செண்ட் ரூ.20,000, ரூ.30,000 தான் போகும். மேற்சொன்ன மதிப்பை அனுசரித்து தான் ஒப்பந்தம் செய்தோமா என்றால் ஆமாம்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

| ஒம்/-பழனிச்சாமி |
|---|
| மேற்படி வாய்மொழி சாட்சியம் என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, சாட்சி சரியென்று ஒப்புக்கொண்ட பிறகு என் முன்னிலையில் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(ஒம்/-திரு.M.முருகன்,)<br>சார்பு நீதிபதி,<br>பவானி. |